22-12-2021
O.S.255 /2016
வா.சா. 1 திரு முத்து (எ) முத்துசாமி

வா .சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை(1 ம் பிரதிவாதி தரப்பில் )

என் தகப்பனார் பெயர் கந்தமூப்பன். எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் பழனியாண்டி மூப்பன். பழனியாண்டி மூப்பனுக்கு 5 மகன்கள். அவர்கள் பெயர் பெரிச்சி மூப்பன், கூளையமூப்பன், கந்தமூப்பன் ஆகிய என் அப்பா, அம்மாசி, சுப்ரமணி, ஆவார்கள். தாவா சொத்து தாரமங்கலத்தில் இருக்கிறது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.16 ஏக்கர். ச.எண். 166/3 ல் மொத்த விஸ்தீரணம் 1.16 ஏக்கர் தான். அந்த விஸ்தீரணத்தைப் பொறுத்து மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். கந்தமூப்பனுக்குப் பாத்தியப்பட்ட வேறு சொத்து சிக்கம்பட்டியில் இருப்பதாகச் சொல்வது சரியல்ல. சிக்கம்பட்டியில் என் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாகவும், அது எனக்குப் பாத்தியப்பட்ட சொத்து என்று பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் தகப்பனாரும், அவரின் சகோதரரான அம்மாசியும் பாகம் செய்துகொண்டனர். அது ஒரு எழுத்துமூலமான பாகம் ஆகும். அந்த பாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனாருக்கு 4 மகன்கள். அவர்கள் பெயர் பெரியசாமி (எ) பெரியண்ணன், பழனிசாமி, பெரியண்ணன் (எ) தூங்கான், 1 ம் பிரதிவாதியாகிய சின்னு மற்றும் நானும் ஆவேன். என் தகப்பனாருக்கு ஒரு மனைவி. அவர் பெயர் அங்கம்மாள். என் தகப்பனாருக்கு கந்தாயி என்ற மற்றொரு மனைவி இருந்ததாகச் சொல்வது சரியல்ல. மேற்படி கந்தாயி என்பவரின் மகன் தான் முத்து (எ) முத்துசாமி என்றும், அந்த முத்து (எ) முத்துசாமி நான் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.17-ல் குடும்ப அட்டை நகலில் எனது பெயர் முத்து என்று மட்டும் காட்டப்பட்டிருப்பதாகச் சொல்வது சரிதான். வா.சா.ஆ.16 வங்கிக் கணக்குப் புத்தக நகலிலும் எனது பெயர் முத்து என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்வது சரிதான். வா.சா.ஆ.15 ஆதார் நகலில் எனது பெயர் முத்து என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்வது சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எதிலும் எனது பெயர் முத்து (எ) முத்துசாமி என்று காட்டப்படவில்லை என்றும், அதனால் முத்து (எ) முத்துசாமி நான் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.14 வாக்காளர் அடையாள அட்டை நகலிலும் எனது பெயர் முத்து என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது சரிதான். தாவா சொத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். பாகம் பிரித்தமாதிரி அனுபவித்து வருகிறீர்களா என்றால், என்னை அனுபவிக்க

பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். தாவா சொத்தில் நானும், சுவாதீனத்தில் இருக்கிறேன் என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பது சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டாவில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், அதில் முத்துசாமி என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் சொன்னால் அது எனது பெயரைத் தான் குறிக்கிறது. வா.சாஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்துசாமி நான் இல்லை என்றும், அது கந்தாயி மகன் முத்துசாமி என்றும் சொல்வது சரியல்ல. எனது தகப்பனார் இறந்தபின்னர் எனது அண்ணன் பழனிசாமி மற்றும் கந்தாயி மகன் முத்துசாமி ஆகியோர் பெயர்களில் பட்டா ஏற்பட்டதாகவும் அதில் எனது பெயர் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. நான் எப்போதும் கைரேகை வைக்கும் பழக்கம் உடையவரா என்றால் நான் ஏற்கனவே கையெழுத்துப்போடுவேன். தற்பொழுது வயோதிகம் காரணமாக கைரேகை வைக்கிறேன். தற்பொழுது கையெழுத்துப்போடுவதில்லை. எனக்கு கையெழுத்து போடுவதற்கு கை நடுங்குகிறது. நான் கையெழுத்துப்போட்ட கிரய ஆவணம் அசல் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருக்கிறீர்களா என்றால் நான் கையெழுத்துப்போட்ட ஆவணம் இல்லை. 1974 ல் எனது அண்ணன் பழனிசாமியும், கந்தாயி மகன் முத்துசாமியும் குதவை வைத்தது தெரியுமா என்றால் அவ்வாறு குதவை வைக்கவில்லை. 21.9.1974 ல் மேற்படி இருவரும், கந்தசாமி என்பவருக்கு ஒரு பதிவு குதவை செய்து வைத்திருப்பதாகச் சொல்வது சரியல்ல. உண்மையில் எனது பெயர் முத்துசாமியாக இருக்கும்பட்சத்தில் கந்தசாமி என்பவருக்கு மேற்படி இருவரும் வைத்த குதவை எனக்கு தெரிந்திருக்கும் என்பது சரியல்ல. நான் எனது தகப்பனாரின் மூத்த மனைவிக்குப் பிறந்த முத்து என்றும், முத்துசாமி என்பவர் எனது தகப்பனாரின் 2 ம் மனைவிக்கு பிறந்தவர் என்றும், சொல்வது சரியல்ல. மேற்படி முத்துசாமி இறந்து 30 வருடங்களுக்கு மேலாகிறது என்றும், தாவா சொத்தில் நான் துர்லாபம் அடையும் நோக்கத்தில் இறந்த முத்துசாமியின் பெயரை எனது பெயருடன் சேர்த்துக்கொண்டு வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியான 23- 3/4 ஐ என் தகப்பனாரும், பெரியண்ணமூப்பனும் சேர்ந்து எனது மற்ற சகோதரர்களான பழனிசாமிமற்றும் முத்துசாமி ஆகியோருக்கு 20.9.1974 ல் ஒரு கிரயம் கொடுத்திருப்பது தெரியுமா என்றால் அவ்வாறு எனக்கு கிரயம் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு நான் கிரயம் வாங்கியிருப்பதாகச் சொல்வது பொய் என்பது சரியல்ல. அந்த கிரயப்பத்திரம் என் வசம் இல்லை. அதனை 1 ம் பிரதிவாதி எடுத்துச் சென்று விட்டார். அந்த சொத்து பழனிசாமி மற்றும் கந்தாயி மகன் முத்துசாமி ஆகியோருக்குப் பாத்தியப்பட்ட சொத்து என்றும், அது என்னால் கிரயம் வாங்கப்படவில்லை என்றும் சொல்வது சரியல்ல. அதன் காரணமாகத்தான் அந்த அசல் ஆவணம் என் வசம் இல்லை என்றும், சொல்வது சரியல்ல. இதே சர்வே எண்ணில் பழனிசாமி, முத்துசாமிக்கு 12 செண்ட் கிரயம் கொடுத்திருக்கிறாரா என்றால் எனக்குக் கொடுத்து இருக்கிறார். அவ்வாறு

எனக்கு கிரயம் கொடுக்கப்படவில்லை என்றும், கிரயம் வாங்கிய முத்துசாமி நான் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் 60 செண்ட் விஸ்தீரணம் கிடைக்கவேண்டியதாக இருக்கிறது என்று நான் வழக்காடி வருவது உண்மைக்குப் புறம்பானது என்பது சரியல்ல. எனக்கு சிக்கம்பட்டி கிராமத்தில் சொத்து கொடுக்கப்பட்டு விட்டதாகவும், மற்ற சகோதரர்களுக்கு தாவா சொத்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்வது சரியல்ல. 8.5.1980 ல் 30 செண்ட் விஸ்தீரணம் சிக்கம்பட்டியில் இருப்பதை, என் அண்ணன் பழனிசாமி உங்களுக்கும், சின்னு என்பவருக்கும் கிரயம் கொடுத்திருக்கிறாரா என்றால் , சின்னு வாங்கவில்லை. நான் தான் வாங்கியிருக்கிறேன். சின்னு, மற்றும் எனக்கு பழனிசாமி மேற்படி தேதியில் குறிப்பாக கந்தமூப்பன் மகன் முத்து மற்றும் சின்று என்று பெயர் குறிப்பிட்டு ஒரு கிரயம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்வது சரியல்ல. மேற்படி கிரயத்தை நான் ஒப்புக்கொண்டால் எனது பெயர் முத்து என்பது தெரிந்துவிடும் என்பதால், அதனை நான் வேண்டுமென்றே ஒப்புக்கொள்ள மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாரமங்கலத்தில் எனக்கு சொத்து தரப்படவில்லை என்றும், எனக்கு சொத்து சிக்கம்பட்டியில் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், அதனால் தாரமங்கலம் சொத்து எனது சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்டதாகவும், அதில் கந்தாயி மகன் முத்துசாமிக்குதான் தாரமங்கலத்தில் சொத்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்வது சரியல்ல. அந்த அடிப்படையில்தான் 1 ம் பிரதிவாதி சின்னுக்கு எனது அண்ணன் பழனிசாமி, 23.5.1980 ல் ஒரு 29- 3/4 செண்டை கிரயம் கொடுத்திருப்பதாக சொல்வது சரியல்ல. அது எனது சொத்து. சின்னு, பழனிசாமியிடம் கிரயம் வாங்கிய சொத்தை இல்லை என்று சொல்வதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்பது சரியல்ல. 3 ம் பிரதிவாதி இன்பவள்ளி மேற்படி கந்தாயி மகன் முத்துசாமியின் மகள் என்றால் அது பழனிசாமியின் மகள். 3 ம் பிரதிவாதி மேற்படி முத்துசாமியின் மகள் என்றும், அதனை நான் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கந்தாயி மகன் முத்துசாமி, 10.3.1985 ல் இறந்து விட்டதாக சொல்வது சரியல்ல. நான் தான் முத்துசாமி. மேற்படி இன்பவள்ளி கந்தாயி மகன் முத்துசாமியின் மகள் என்றும், அந்த அடிப்படையில்தான் இன்பவள்ளி தாவா சொத்தில் ஒரு பகுதியை 26.9.2014 ல் 1 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்திருப்பதாகச் சொல்வது சரியல்ல. தாவா சொத்து முழுவதும் மேற்கூறிய காரணங்களால், 1 ம் பிரதிவாதிக்கு தனித்துப் பாத்தியப்பட்ட சொத்து என்பது சரியல்ல. அந்த அடிப்படையில் 1 ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1.4.2015 ல் தனது மனைவி மணி ஆகிய 6 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தியிருப்பதாகச் சொல்வது சரியல்ல. அதனால் மேற்கூறிய ஆவணங்கள் செல்லாது என்று கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே 24, 24, 12 செண்டாக வாய்மொழியாக பிரிக்கப்பட்டுவிட்டதாக பிராதில் சொல்லிவிட்டு, தற்போதும் பாகம் பிரிக்கப்படவில்லை

என்று பரிகாரம் கோருவது செல்லத்தக்கதல்ல என்பது சரியல்ல. மேற்கூறிய ஆவண விவரங்கள் வழக்கிற்கு முன்பு தான் வில்லங்கம் போட்டு பார்த்தபோது தெரியவந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. முத்து (எ) முத்துசாமி நான் தான் என்று சொல்லி போலீசில் புகார் கொடுத்தேன். அங்கு வழக்கு பதிவு செய்யவில்லை. நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். உண்மையில் நான் முத்துசாமி இல்லை என்றும், அதனால்தான் எனது புகார்மீது போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இன்பவள்ளி தனது தகப்பனார் முத்துசாமி என்றும், அவர் இறந்துவிட்டதாகவும் சொல்லி வாரிசு சான்றிதழ் குறித்த ஆவணங்கள் வாங்கி இருப்பதை செல்லாது என்று அறிவிக்க வழக்கு எதுவும் தாக்கல் செய்து இருக்கிறீர்களா என்றால் இல்லை. அரசு அதிகாரிகள், இன்பவள்ளிக்கு ஆதரவாக சான்று வழங்கியிருப்பது செல்லத்தக்கதில்லை என்று சொல்லி, அரசு அதிகாரிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாகச் சேர்த்து பரிகாரம் எதுவும் .கோரியிருக்கிறீர்களா என்றால் இல்லை. நான் முத்து மட்டும் தான் என்றும், முத்துசாமி என்பவர் கந்தாயி மகன் என்றும், அந்த முத்துசாமியின் பெயரை எனது பெயருடன் இணைத்துக்கொண்டு, உண்மைக்குப் புறம்பாக பரிகாரம் கோரி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய காரணங்களால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியதாக இருக்கிறது என்றால் சரியல்ல.

( 1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணை, 3ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)

மறு விசாரணை -இல்லை.

Sd/- Muthu @ Muthusamy

Sd/- Tr.P.Elango,
III ADJ Salem.